2015 செப்டம்பர் 15]

பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் அந்தப் நகராட்சியில் போக்குவரத்திற்கு இடையூறான பாதையில் அந்த மாணவர்கள் பயணிக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் நான்குவழிச் சாலையைக் கடந்து செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிலையை உணர்ந்து, குப்பிச்சிப்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவார்களா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலூர் நகராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்றால், 8 ஆம் வகுப்பில் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆக இருக்க வேண்டும். அந்தப் பகுதி நகராட்சிப் பகுதியாக இருப்பதனால், ஓர் ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். இவை அனைத்தும் இருக்கும்பட்சத்திலே அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

257—

மண்பாண்டத் தொழிற்கூடம்

***41358 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதியில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது பதிலை வழங்குகிறேன்.*

கும்பகோணம் தொகுதியில் மண்பாண்டம் செய்யும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில், புதுப் பானையில் புத்தரிசி மற்றும் வெல்லமிட்டு பொங்கல் தயாரிக்கும் புதுப் பானை செய்தல், திருவிழாக் காலங்களில் விநாயகர் உள்ளிட்ட மண் சிலைகளை வடிவமைத்தல், கார்த்திகை மாதம் வீடுகளிலும், ஆலயங்களிலும் ஒளி வெள்ளம் வீசச் செய்யும் அன்றாடம் ஏற்றுகின்ற அகல் விளக்குகளைத் தயாரித்தல் போன்ற தொழில்களைப் பாரம்பரியமாகச் செய்துவரும் குலாலப் பெருமக்கள் பல தலைமுறைகளாகத் தொன்றுதொட்டு வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் கும்பகோணம் பகுதியில், நாதன்கோயில், கொருக்கை, திருப்புறம்பியம், நீலத்தநல்லூர், திப்பிராஜபுரம், உடையாளூர், பம்பப்படையூர், ஆரியப்படையூர், திருநாகேஸ்வரம், அய்யாவாடி, கருப்பூர், தேவனாஞ்சேரி, சோழபுரம், மருதாநல்லூர் மற்றும் எனது சொந்த ஊரான சாக்கோட்டை போன்ற இடங்களில் மண்பானை, மண்சட்டி, மண்குதிரை, மண்குடம் மற்றும் மண்கலசம் ஆகியவற்றைச் செய்து தருகின்றனர். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

திரு. க. அன்பழகன்: *இவர்களுக்கு களிமண் மற்றும் மணல் எடுக்க தற்போது அனுமதி மறுக்கப்படுகிறது. திருப்புறம்பியம் கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில், அரசின் சார்பில் சிப்காட் மூலமாக மண்பாண்டம் செய்யும் தொழிற்கூடம் அமைத்து,*

2015 செப்டம்பர் 15]

களிமண், மணல், தண்ணீர் போன்ற மூலப் பொருட்களை குலாலப் பெருமக்களுக்கு அரசே வழங்கி, இன்றைய இளைய தலைமுறையினர் மின்சக்கரத்தைப் பயன்படுத்தி மண்பாண்டங்கள் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் மண்பாண்டம் செய்யும் தொழில் பாதிக்கப்படுவதை கருத்தில்கொண்டு, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு, மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும்வகையில், மழைக்கால பராமரிப்புத் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி, 13,118 தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.4,000/- வீதம் ரூ.5,24,72,000/- நிதியுதவி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 565 பயனாளிகளில், 187 பேர் கும்பகோணத்தைச் சேர்ந்தவர்கள். மண்பாண்டம் செய்யும் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, 6 மாவட்டங்களில் சுமார் 150 மண்பாண்டம் செய்யும் தொழிலாளர்களுக்கு ரூ.42,94,000/- செலவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவலம்பொழில் கிராமத்தில் மண்பாண்ட கூட்டுறவுத் தொழிற்சங்கம் செயல்பட்டு வருவதால், கும்பகோணத்தில் மண்பாண்டம் செய்யும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணம் தொகுதியில் மண்பாண்டம் செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்மூலம் ரூ.25 இலட்சம் வரை கடன் அளிக்கப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரை கதர் ஆணையம்மூலம் மானியம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமாக மண்பாண்டங்களில் சமைத்த உணவுப் பொருட்கள் கெட்டுப் போகாமலும், சுவை குன்றாமலும், உடலுக்கு ஆரோக்கியம் கொடுப்பதாகவும் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. மண்பானையில் வைக்கப்பட்ட குடிதண்ணீர் குளிர்ச்சியுடன் இருக்கிறது. குலாலப் பெருமக்களுக்கு களிமண் எடுக்க அனுமதி மறுப்பு, தண்ணீர்ப் பிரச்சினை போன்ற நடைமுறை சிக்கல்களால், மண்பாண்டங்களின் உற்பத்தி குறைந்திருக்கிறது. நவநாகரீக உலகில் மற்ற உலோகப் பாத்திர உற்பத்தியோடு போட்டியிட முடியாத குலாலப் பெருமக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில், பரிட்சார்த்தமாகவும், சிறப்பாகவும் கும்பகோணம் பகுதியில் மண்பாண்டம் செய்யும் தொழிற்கூடம் அமைத்திடவும், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்தில் அங்கம் வகித்துள்ள குலாலப் பெருமக்களுக்கு, மழைக் காலத்தில் வழங்கிவரும் நிவாரணத் தொகையான 4 ஆயிரம் ரூபாயை அனைவருக்கும் வழங்கிடவும், அனைத்துச் சலுகைகளையும் அளித்திடவும், மண்பாண்டம் செய்வதற்குத் தேவையான களிமண், மணல் போன்ற மூலப்பொருட்கள் கிடைத்திடவும், தண்ணீர் எடுப்பதற்கு அனுமதி அளித்திடவும், மின் சக்கரம் போன்ற உபகரணங்கள் மானிய விலையில் கிடைத்திடவும், உடனடியாக வங்கிக் கடன் கிடைத்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். கும்பகோணம் தொகுதியில் 25 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியதாக மாண்புமிகு அமைச்சர் சொன்னார்கள். எங்களுடைய பகுதியில் எத்தனை பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகளை, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக்*

கொண்டு சென்று, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 258 மற்றும் 259 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

260—

நவின அரிசி ஆலை

***991 திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமானூரில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தில் நவீன அரிசி ஆலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, அந்தப் பகுதியிலே ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவர்களுக்கு 25 சதவிகிதம் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற பல்வேறு மானியங்களை வழங்கும். அதன்மூலமாக அவர்கள் பயன்பெறலாம். எனவே, இந்தத் தொழில்களை நடத்த அவர்கள் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு இந்த மானியங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா